**கவனிக்க.-** *2023.11.03 ஆந் திகதிய 2357 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III (தமிழ் மொழி மூலம்) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2358 - 2023 නොවැම්බර් මස 10 වැනි සිකුරාදා - 2023.11.10

*2358 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)



| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *2510* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *2511* |



**கவனிக்க.**-என் கனவு யாழ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2023, ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது. .

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2507-B 82512-5,441 (2023/11)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

*பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.*

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி (சிங்களம்) – அநுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரர் 30 வயதுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வயதாகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் / தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, திசெம்பர் மாதம் 11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, ஒற்றோபர் 28.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | ஹொரொவ்பதான | ஹுருளு பலாத்த (கபுகொல்லேவ) பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம் |
| அநுராதபுரம் | மிகிந்தலை | நுவரகம் பலாத்த (கைபிடியாவ) பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம் |
| அநுராதபுரம் | கெகிராவ | களாகம் பலாத்த (மடாட்டுகம) பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம் |
| அநுராதபுரம் | இபலோகம | களாகம் பலாத்த (கலாவெவ) பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம் |
| அநுராதபுரம் | கஹட்டகஸ்திகிலிய | ஹுருளு பலாத்த (நெலுகொல்லாகட) பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம் |

*11-127*

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

முகாமைத்துவ சேவை அலுவலர் சேவையில் உள்ள தரம் III ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2014 (I) 2023

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் தரம் III ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை, அனுமதிக்கப்பட்ட குறித்த சேவைப் பிரமாணக் குறிப்புக்கமைய பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2024, பெப்புருவரி மாதம் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது. இதற்கான விண்ணப்பம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், இணைய வழி (online) முறைமையில் மட்டுமே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பங்களை இணைய வழி ஊடாக அனுப்பியதன் பின்னர் அதனை பதிவிறக்கம் செய்து அச்சுப் பிரதியை விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தி அவசியமெனில் நிறுவனத் தலைவரின் சான்றுப்படுத்தலுடன் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் “பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தாபன பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு” என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் முகாமைத்துவ சேவை அலுவலர் சேவையில் உள்ள தரம் III ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2014 (I) 2023 என தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2023, திசெம்பர் மாதம் 11 ஆந் திகதியாகும்.

2.0 இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியுடைய பரீட்சார்த்திகள் தொடர்பில் 2013.12.11 ஆந் திகதிய 1840/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பந்தி 8, பந்தி 15 இனது இடைக்கால ஏற்பாடுகள் மற்றும் இணைப்பு 04 இல் விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

3.0 இச் சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தரம் III இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையினைப் பூர்த்திசெய்திராத ஆனால் அப்பரீட்சையில் (1) அலுவலக முறைமைகள் (2) கணக்கீட்டு முறைமைகள் (3) கணினிப் பரீட்சை ஆகிய

பாடங்களில் ஒன்றிலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களிலோ சித்தியெய்தி அல்லது விலக்களிப்புப் பெற்றுள்ள அலுவலர்கள் இச்சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தரம் III இலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் உரிய பாடங்களிலிருந்து பாடத்துக்குப் பாட அடிப்படையில் விலக்களிக்கப்படுவர். நியமனத் திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களுக்குள் இப்பரீட்சையினை சித்தியெய்துதல் வேண்டும்.

4.0 முகாமைத்துவ சேவை அலுவலர் சேவையில் உள்ள தரம் III ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான இப்பரீட்சையானது கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, குருநாகல், அநுராதபுரம், பதுளை மற்றும் இரத்தினபுரி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்களின் பட்டியல் மற்றும் நகர இலக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன. குறிப்பிடப்பட்ட நகரம்/நகரங்களை பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. அனைத்து அல்லது பெரும்பாலான முன்மொழியப்பட்ட நகரங்களிலும் பரீட்சை நிலையங்களை அமைப்பதற்கு போதுமான எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்கவில்லை என்றால், பரீட்சையை கொழும்பில் மாத்திரம் நடத்துவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏற்பாடு செய்வார்.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| யாழ்ப்பாணம் | 04 |
| மட்டக்களப்பு | 05 |
| குருநாகல் | 06 |
| அநுராதபுரம் | 07 |
| பதுளை | 08 |
| இரத்தினபுரி | 09 |

மேற்படி பரீட்சை நிலையங்களில் போதுமான எண்ணிக்கையில் விண்ணப்பதாரர்கள் இல்லை என்றால், அந்த பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு, குறித்த விண்ணப்பதாரர்கள் அருகில் உள்ள பரீட்சை நிலையத்திற்கு அனுப்பப்படுவார்கள்.

5.0 (i) இப்பரீட்சையானது, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன், அது தொடர்பில் அவரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாவர்.

(ii) பரீட்சை விண்ணப்பதாரிகளுக்கான ஒழுங்குவிதிகளானவை வர்த்தமானி அறிவித்தலில் வெவ்வேறாக அச்சிடப்பட்டுள்ளன. இந்த சட்ட திட்டங்களில் எவற்றையாவது மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்திகள் உட்படுத்தப்படுவர்.

6.0 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது இருந்த விண்ணப்பதாரியின் பதவி மற்றும் சேவை நிலையம், பரீட்சை தொடர்பான அனைத்து விடயங்களும் கவனத்தில் எடுக்கப்படுவதுடன் பரீட்சை விண்ணப்பம் அனுப்பியதன் பின்னர் நிகழும் மாற்றங்கள் எவையும் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.

**குறிப்பு**.- மாகாண அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள் மற்றும் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஏனைய நிறுவன அலுவலர்களின் விண்ணப்பங்களை இலகுவாக வேறுபடுத்த விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் பொருத்தமான சேவை அல்லது குறித்த நிறுவனத்துக்குரிய குறியீட்டு இலக்கத்தை குறிப்பிட வேண்டும். அந்த வகையில் இணைந்த சேவைக்குரிய உத்தியோகத்தரின் குறியீட்டு இலக்கம் 10 ஆகும். (சரியான இலக்கத்தை குறிப்பிடாதுவிடின் பெறுபேறுகளை வெளியிடுவதில் ஏற்படும் சிக்கல்கள் தொடர்பாக பொறுப்பேற்கப்படமாட்டாது.)

7.0 பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றினை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேற்படி அடையாள அட்டையை சமர்ப்பிக்க முடியாத பரீட்சார்த்திகளின் பரீட்சார்த்தி தகைமையை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் இரத்துச் செய்ய முடியும். மேலும் பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் முகமும் இரண்டு காதுகளும் மூடப்படாத நிலையில் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். அவ்வாறு தங்களது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கின்ற பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபடத்திற்குள் பிரவேசித்ததிலிருந்து பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு பரீட்சார்த்தியை அடையாளம் காணக்கூடிய வகையில் முகமும் இரண்டு காதுகளும் திறந்திருக்க வேண்டும்.

8.0 (i) விண்ணப்பங்கள்.- இணையவழி மூலமான (Online) பரீட்சை விண்ணப்பங்கள் ஆங்கில மொழி மூலம் மட்டுமே நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரியினால் மேற்கொள்ளப்பட்ட மென்பிரதி மற்றும் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்ட அச்சுப் பிரதி (print out) ஆகிய இரண்டும் பரீட்சைத் திணைக்களத்துக்குக் கிடைக்கப்பெற்றதன் பின்னர் அந்த மென் பிரதியும் அச்சுப் பிரதியும் சரிபார்க்கப்படுவதுடன் (Verify), செல்லுபடியாகும் விண்ணப்பமாக திணைக்களத்தினால், ஏற்றுக்கொள்ளப்பட்டது / ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது முறைமைக்கு பிரவேசிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கைத்தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தியொன்று (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (ஈ-மெயில்) முகவரிக்கு அறிவிக்கப்படும். இணைய வழி மூலமான விண்ணப்பத்தை நிரப்புவதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள பொது அறிவுறுத்தல்களை (Common Instructions) பதிவிறக்கம் செய்துகொள்ளுங்கள். விண்ணப்பத்தை நிரப்பும் போது இந்த அறிவுறுத்தல்களை கண்டிப்பாக பின்பற்றவும். விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியொன்றைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அதில் செய்யப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியான திருத்தமாகக் கருதப்பட மாட்டாது. முழுமைப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

(ii) **பொய்யான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை**.- விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்யும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் என தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி தகைமையை இரத்துச் செய்ய முடியும்.

(iii) முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டியதில்லை. எனினும், அதற்கடுத்த தடவைகளில் ஒரு பாடத்துக்கு ரூபா 200.00 வீதம் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டும். பரீட்சைக் கட்டணத்தினை செலுத்தும்போது இணையவழி முறைமையில் வழங்கப்படும் பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைமையின்கீழ் மட்டுமே செலுத்தப்படுதல் வேண்டும்.

(i) எந்தவொரு வங்கிக் கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card)
(ii) எந்தவொரு வங்கி செலவு அட்டை மூலம் (Any Bank Debit Card)
(iii) இலங்கை வங்கி இணைய வங்கிச் சேவை முறைமை மூலம் (Bank of Ceylon Online Banking Method)
(iv) எந்தவொரு இலங்கை வங்கி கிளையின் மூலம் (Bank of Ceylon Slip Payment)

**குறிப்பு**.- மேற்படி முறைமைகளின் மூலம் கட்டணத்தை செலுத்தும் முறை தொடர்பான அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சையுடன் தொடர்புடைய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளன. கட்டணம் கிடைக்கப்பெற்றமை பற்றி குறுஞ்செய்தியொன்றின் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் செய்தியொன்றின் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சை கட்டணத்துக்கான முழுமையான தொகை செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், பரீட்சை கட்டணம் குறைவாக அல்லது கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறப்பட்ட கட்டண முறைமைகளின் ஊடாக பரீட்சை கட்டணங்களை செலுத்தும் போது ஏற்படும் தவறுகள் தொடர்பில் இலங்கை பரீட்சைகள் திணைக்களம் பொறுப்புக்கூற மாட்டாது. பரீட்சைக்காக செலுத்தப்பட்ட தொகை எக்காரணம் கொண்டும் திருப்பியளிக்கப்படவோ வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

9.0 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் அனுமானத்திற்கு ஏற்ப அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்திய விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை வழங்குவார். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பான அறிவிப்பொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பத்திரிகைகளில் வெளியிடப்படும். அவ் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளதன் படி பரீட்சை நடைபெறும் திகதிக்கு குறைந்தபட்சம் 02 நாட்கள் அல்லது 03 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளதன்படி பரீட்சைகள் திணைக்களத்தின் தாபனப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு கிளைக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை

எடுத்தல் வேண்டும். அவ்வாறு விசாரணை செய்யும் போது விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றை சரியாகக் குறிப்பிட வேண்டும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகளாயின் மேற்குறிப்பிட்டுள்ள விபரங்களோடு, அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய ஒரு தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தைக் குறிப்பிட்டு ஒரு கோரிக்கைக் கடிதத்தினை தொலைநகல் ஊடாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்புதல் மிகவும் பயனுடையதாகும். அவ்வாறு அனுப்பும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் ஏதாவதொரு தகவலை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருப்பின் அப் பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பத்தை பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டையும் கைவசம் வைத்திருத்தல் பிரயோசனப்படலாம்.

10.0 விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்பட்டமையானது பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சையில் தோற்றுவதற்குத் தகுதியினைக் கொண்டுள்ளார் எனக் கருதலாகாது. பரீட்சைக்குத் தோற்றும் முதல் தினத்திலே பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தன்னுடைய கையொப்பத்தினைச் சான்றுப்படுத்திய அனுமதி அட்டையினை சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையின்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏதுவான வகையில் கடமை விடுமுறையினை திணைக்களத் தலைவர்கள் அனுமதித்தல் வேண்டும். பிரயாணச் செலவினங்கள் எவையும் செலுத்தப்படமாட்டாது.

10.1 விண்ணப்பத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அனுமதியளிக்கப்பட்ட அதிகாரியால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

11.0 இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் நடாத்தப்படும். உரிய சேவைக்கு நுழைவுப் பரீட்சைக்காக அவர்கள் தோற்றிய மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழி ஒன்றில் பரீட்சார்த்திகள் தோற்ற முடியும். போட்டிப் பரீட்சை இல்லாமல் சேவைக்குள் உள்நுழைந்த பரீட்சார்த்திகள் தொடர்பில் அவர்களின் கல்வி மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழி ஒன்றில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கப்படும் மொழி மூலத்தினைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

12.0 அலுவலர்கள் தமது தற்துணிவின் பேரில் வேறுபட்ட தடவைகளில் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகத் தோற்றலாம். எனினும், சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் குறைந்தது நாற்பது வீதத்தினை (40%) அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

13.0 பரீட்சை பெறுபேறுகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்படுவதுடன், பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத் தளத்தில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

14.0 **பரீட்சை நடைமுறை**.- பின்வரும் பாடங்களை உள்ளடக்கும் எழுத்துப் பரீட்சை ஒன்றுக்கு பரீட்சார்த்திகள் தோற்றுதல் வேண்டும் :

| பாடம் | பாட இல. | புள்ளிகள் | நேரம் |
|---|---|---|---|
| 1. அலுவலக முறைமை | 01 | 100 | 02 மணித்தியாலம் |
| 2. கணக்கீட்டு முறை | 02 | 100 | 02 மணித்தியாலம் |
| 3. கணினிப் பரீட்சை | 03 | 100 | 1 1/2 மணித்தியாலம் |

14.1 **அலுவலக முறைமை (பாட இல. 01)** .-

அரசாங்க அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள அலுவலக முறைமைகள் பற்றிய அடிப்படை அறிவு, அவ் அறிவை நடைமுறையில் பயன்படுத்தும் ஆற்றல், உத்தியோகபூர்வ ஆவணங்களை உரிய முறையில் விளங்கி தெளிவானதும் சுருக்கமானதுமான குறிப்புக்கள் ஊடாக தமது கருத்துக்களை/அவதானிப்புக்களை உறுதியானமுறையில் சமர்ப்பிக்கும் ஆற்றல், கட்டளைக்கு ஏற்ப கடிதமொன்றினை வரைவு செய்யும் ஆற்றல் என்பன பரீட்சிக்கப்படும். இந்த வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

பகுதி I - குறுகிய பதில்கள் எதிர்பார்க்கப்படும் கேள்விகளைக் கொண்டுள்ளது. வினாத்தாளிலேயே பதில்கள் வழங்கப்பட வேண்டும். அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்க வேண்டும். (25 புள்ளிகள்)

பகுதி II - கட்டமைக்கப்பட்ட கட்டுரை வினாத்தாள். நான்கு வினாக்களில் மூன்றிற்கு விடையளிக்க வேண்டும். (75 புள்ளிகள்)

14.2 **கணக்கீட்டு முறைமை (பாட இல. 02)**

அரசாங்க அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள அடிப்படை கணக்குகள், கணக்கீட்டு முறைமைகள், கணக்கீட்டு கட்டுப்பாட்டு ஏடுகள் தொடர்பான விளக்கம் மற்றும் அறிவு என்பன பரீட்சித்தல் இவ்வினாத்தாள் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

பகுதி I - குறுகிய பதில்கள் எதிர்பார்க்கப்படும் கேள்விகளைக் கொண்டுள்ளது. வினாத்தாளிலேயே பதில்கள் வழங்கப்பட வேண்டும். அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்க வேண்டும். (25 புள்ளிகள்)

பகுதி II - கட்டமைக்கப்பட்ட கட்டுரை வினாத்தாள். நான்கு வினாக்களில் மூன்றிற்கு விடையளிக்க வேண்டும். (75 புள்ளிகள்)

**14.3 கணினிப் பரீட்சை (பாட இல. 03)**

விண்ணப்பதாரருக்கு பின்வரும் திறன்கள் உள்ளதா என்பதை பரீட்சிப்பதே இந்த பரீட்சையின் நோக்கமாகும்.

(i) தகவல் தொழில்நுட்பம் பற்றிய அடிப்படை எண்ணக்கருக்கள்
(ii) விண்டோஸ் தொழிற்பாட்டு முறைமை
(iii) கோவை முகாமை
(iv) சொல் உள்ளீடு (Word Processing)

அடிப்படைத் தேர்ச்சிகள், திரை பற்றிய பரீட்சயம், வசனங்களில் திருத்தம் செய்தல், வசன அமைவிடம், எழுத்துரு மற்றும் பண்புகள், பந்தியமைப்பு, பந்தி வரிகளுக்கிடையிலான இடைவெளிகளை மாற்றுதல், பாய்புள்ளி அமைப்பு (Tab setting) வசனங்களைத் தேடுதலும் மாற்றீடு செய்தலும், எழுத்துப்பிழை மற்றும் இலக்கணம், ஒத்தக்கருத்துச் சொற்கள், நிரல்களைப் பயன்படுத்தல், பக்க வடிவமைப்பு, ஆவணங்களை அச்சிடல், அட்டவணைகளை உருவாக்குதல், வாசகங்களை வகைப்படுத்தல், கோவை முகாமை, அஞ்சல்களை பல முகவரிக்கு அனுப்புதல் மாக்ரோ (macros) பயன்பாடு.

(v) விரிதாள் (Spreadsheets)

அடிப்படைத் திறன்கள், வடிவமைத்தல் (formatting), திருத்துதல், நிரல்கள் மற்றும் வீச்சுக்கள், சொருகுதலும் நீக்குதலும், தரவுகளை வகைபடுத்தல், வரைபுகளை உருவாக்கல், அச்சிடல், @ தொழிற்பாடு (@ function) மக்ரோக்களின் பயன்பாடு, கோவை முகாமை.

(iv) இணையம் மற்றும் மின்னஞ்சல் :

இணையம் பற்றிய அறிமுகம், அடிப்படைத் தேர்ச்சிகள், மின்னஞ்சல்களைப் பெற்றுக்கொள்ளுதல், மின்னஞ்சல்களை அனுப்புதல், அவற்றுக்குப் பதிலளித்தல், இணைப்புக்களைப் பயன்படுத்துதல், முகவரிகளை இனங்காண்பதற்கு சுருக்கப்பெயர்களைப் பயன்படுத்தல், தகவல்களைத் தயாரித்தல்.

இந்த வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

பகுதி I - 40 பல் தேர்வு/குறுகிய பதில் கேள்விகளைக் கொண்டுள்ளது. நேரம் 45 நிமிடங்கள் (40 புள்ளிகள்)

பகுதி II - 05 பகுதியளவு - கட்டமைக்கப்பட்ட கேள்விகள். நேரம் - 45 நிமிடங்கள் (60 புள்ளிகள்).

15.0 பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறுபவர்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்பட நேரிடும்.

16.0 மேலும் இவ் அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினது தீர்மானமே இறுதியானதாகும்.

17.0 இப்பரீட்சை அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

எஸ். ஆலோக பண்டார,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2023, ஒற்றோபர் 25.

11-124

## கிறிஸ்தவ சமய பண்பாட்டு திணைக்களம்

## கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை - 2023

**நியமங்கள் அடங்கிய பத்திரம்**

2020, 2021, 2022 ஆம் வருடங்களுக்கான கத்தோலிக்க மறைப்பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நாடு முழுவதிலும் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டு, இப் பரீட்சை நடாத்தப்படும்.

02. **பரீட்சை நிலையங்கள்**.- எல்லா மாவட்டங்களிலும், பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கைப்படி பரீட்சை நிலையங்கள் ஏற்பாடு செய்யப்படும். போதியளவான பரீட்சார்த்திகள் ஒரு பரீட்சை நிலையத்தில் பரீட்சை எழுத விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் , அப் பரீட்சைநிலையம் இரத்துச் செய்யப்பட்டு அண்மையிலுள்ள வேறு ஒரு பரீட்சை நிலையத்துக்கு பரீட்சார்த்தி மாற்றீடு செய்யப்பட நேரிடும். அமைக்கப்படவுள்ள மாவட்ட பரீட்சை நிலையங்களும் நகரங்களும், அவற்றின் இலக்கங்களும் அறிவித்தலின் இறுதியிலுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

03. **மொழிமூலம்**.- இப்பரீட்சையானது சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் மட்டுமே நடைபெறும். ஆயினும் விண்ணப்பதாரர் தாம் விரும்பும் ஒரு மொழிமூலத்தில் மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவார்.

04. **தகைமை**.- இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் கீழ்க் குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும் :

4.1 கத்தோலிக்க மறைப் பாடசாலை ஒன்றில் 10 ஆம் ஆண்டு சித்தி பெற்று, மறைப் பாடசாலை இறுதி சான்றிதழ் வகுப்பில் குறைந்தது ஒரு வருடம் மறைக்கல்வி பயின்றிருத்தல் வேண்டும் ;

4.2 கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் கத்தோலிக்க மறை (கிறிஸ்தவம் றோ.க.) சித்திபெற்றிருத்தல் வேண்டும்;

4.3 ஒவ்வொரு மறை மாவட்டங்களிலும் நடைபெறும் வருடாந்த மறைக் கல்விப் பரீட்சையில் 11 ஆம் ஆண்டு சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு** : இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் மேலே 4 ஆவது பந்தியில், குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என மறைப்பாடசாலை அதிபரால் அல்லது பங்குத் தந்தையால் உறுதி செய்யப்பட வேண்டும்.

05. **விண்ணப்பிக்கும் முறை** :

5.1 இப் பரீட்சைக்கு நிகழ்நிலை (online) மூலம் மட்டுமே விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

5.2 கத்தோலிக்க மறைப் பாடசாலை - இறுதி சான்றிதழ் பரீட்சைக்காக பரீட்சைத் திணைக்களத்தில் பதிவுகளை மேற்கொண்டுள்ள எல்லா மறைப் பாடசாலைகளுக்கும் தேவையான பயனர் பெயர் (User name) மற்றும் கடவுச் சொல் (Pass word) அத்துடன் அறிவுறுத்தல்கள் காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும்.

5.3 எவரேனும் விண்ணப்பதாரர் வெளிவாரியாக பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார். ஆயினும் 4 ஆம் பந்தியின்படி தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரர் எவரேனும் இருப்பின் அவர், தமது வசிப்பிடத்துக்கு அருகாமையிலுள்ள மறைப் பாடசாலையூடாக 200.00 ரூபாவை பரீட்சைக் கட்டணமாகச் செலுத்தி பரீட்சைக்குத் தோற்றுவதுக்கு விண்ணப்பிக்க முடியும். இது தொடர்பாக தேவையான அறிவுறுத்தல்களும் சகல மறைப் பாடசாலை அதிபர்களுக்கும் வழங்கப்படும்.

5.4 விண்ணப்பப்படிவங்களை பாடசாலை அதிபர் மூலமாக நிகழ் நிலை (Online) ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

5.5 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2023.11.20 ஆந் திகதி இரவு 9.00 மணி வரையாகும்.

5.6 விண்ணப்பதாரர்களின் பெயர், பிறப்புச் சான்றிதழில் (Birth Certificate) உள்ளவாறு குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன் , பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியதன் பின்னர் அச்சுப் பிழைகள் தவிர பெயர்

மாற்றம் தொடர்பாக எந்த விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது . விண்ணப்பங்கள் தெளிவாகவும் சரியாகவும் நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு அமையாத விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

5.7 நிகழ்நிலை மூலம் ( Online) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுறுத்தப்படும் வேளையில் நிகழ்நிலை Server இல் உள்ள தரவுகள் இறுதியானதும் முடிவானதுமான தரவுகளாகக் கொள்ளப்படும்.

5.8 மறைப் பாடசாலையின் கணினி இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றை பிழையின்றி எழுதவும். மறைப் பாடசாலையின் முகவரி மாறுபடின் அது பற்றி அறிவித்தல் வேண்டுமென்பதுடன் மறைப் பாடசாலை அதிபரை தொடர்புகொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிடுக.

5.9 விண்ணப்பதாரரின் சான்றிதழ்கள் சம்பந்தமாகவும் பெற்றுள்ள தகைமைகள் சம்பந்தமாகவும் விண்ணப்பத்தை உறுதிப்படுத்தும் அதிபர் அல்லது பங்குத்தந்தை பொறுப்புக்கூறுதல் வேண்டும்.

06. **பரீட்சை கட்டணம்** : இப்பரீட்சைக்கான கட்டணம் ரூபா 200.00 ஆகும். முதல் முறையாக பரீட்சை எழுதும் மாணவருக்கு இக் கட்டணத்திலிருந்து விலக்களிப்பு வழங்கப்படும். ஊன சித்தியை நிறைவு செய்வதற்கு ஒரு பாடத்துக்கு 50.00 ரூபா கட்டணமாக அறவிடப்படும்.

6.1 பரீட்சைக் கட்டணம் செலுத்தல் : பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய எல்லா விண்ணப்பதாரர்களதும் மொத்தத் தொகையை மறைப் பாடசாலை அதிபர் செலுத்தலாம்.

எந்தவொரு வங்கிக் கடன் அட்டை மூலம் - [Any Bank Credit Card]
இணைய வங்கிச் சேவையைக் கொண்டுள்ள எந்தவொரு வங்கி ஊடாகவும் பற்று அட்டை மூலம் - [Any Bank Debit Card with the Facility of Internet Transactions]

6.2 எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் வேறு பரீட்சைக்கு மாற்றப்படவோ அல்லது மீண்டும் திருப்பித் கொடுக்கப்படவோ மாட்டாது.

07. **பரீட்சை அனுமதி அட்டை**.-

பரீட்சைக்கு அனுமதிக்கப்பட்ட அனைத்து விண்ணப்பதாரிகளுக்கு ம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரரின் மறைப் பாடசாலை அதிபர் மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

7.1 பரீட்சைக்கு தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமக்குரிய பரீட்சை அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டு பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் என்பதுடன் பரீட்சைக்கு தோற்றும் முதலாவது சந்தர்ப்பத்திலேயே அதை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். எவரேனும் விண்ணப்பதாரி தமது அனுமதி அட்டையை ஒப்படைக்காது வைத்திருத்தல் அத்துடன் தமக்குரிய பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றாது வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் அவர் பரீட்சைக்கு தோற்றும் தகவு திறனை இழக்க வேண்டி ஏற்படும்.

7.2 அனுமதி அட்டையில் , விண்ணப்பதாரரின் கையொப்பம், மறைப் பாடசாலை அதிபர் அல்லது பங்குத் தந்தை மூலம் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு 07 நாட்களுக்கு முன்னர் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிட்டால், மறைப் பாடசாலை அதிபரினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு அறிவிக்க வேண்டும். அவ் வேளையில் பின்வரும் விபரங்களை வழங்குதல் வேண்டும் :

(1) பரீட்சையின் பெயர் ;

(2) மறைப் பாடசாலையின் பெயர் ;

(3) மறைப் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ள கணினி இலக்கம் ;

(4) பரீட்சார்த்தியின் முழுப் பெயர் மற்றும் முகவரி ;

(5) விண்ணப்பதாரியின் பரீட்சை நிலையம்/ நகரம்.

08. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**.- பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில், தாம் தோற்றும் எல்லா பாடங்களின் போதும் பரீட்சை நிலையத் தலைவர் திருப்தியுறும் வண்ணம் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல்

வேண்டும். இதன் பொருட்டு பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்:

8.1 தேசிய ஆளடையாள அட்டை ;

8.2 செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;

8.3 செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் தமது முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்திலுள் பிரவேசித்தல் வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளங் காணக்கூடிய வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

09. **பெறுபேறுகள் தீர்மானிக்கப்பட்டு வெளியாதல்**

9.1 எல்லாப் பாடங்களிலும் ஒரு வினா பத்திரத்திற்கு 100 புள்ளி வீதம் வழங்கப்படும். அதற்குரிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது :

| புள்ளிகள் | சித்தி | குறியீடு |
|---|---|---|
| 0-35 | சித்தியின்மை | F |
| 35-54 | சாதாரண சித்தி | S |
| 55-69 | தரமான சித்தி | C (நன்று) |
| 70-100 | விசேட சித்தி | D (மிக்க நன்று) |

9.2 விண்ணப்பதாரியின் பரீட்சைப் பெறுபேறுகள் மறைப் பாடசாலை பொறுப்பாசிரியருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

10. **சான்றிதழ்கள்.**- இப் பரீட்சையில் சித்திபெறும் எல்லா விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சைத் திணைக்களத்தினால் சான்றிதழ் ஒன்று வழங்கப்பட உள்ளது. மேற்படி சான்றிதழ்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் மறைப் பாடசாலை அதிபர்களுக்கு தபால் மூலம் விநியோகிக்கப்படும். மேற்படி பரீட்சையில் சித்தி பெற்று, சான்றிதழைப் பெற்றுக் கொள்ளாத யாரேனுமிருப்பின், அது தொடர்பாக மறைப் பாடசாலை அதிபர் மூலம் "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிருவாக பரீட்சைகள் பெறுபேறுகள் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த.பெ. இல. 1503, கொழும்பு" என்ற முகவரியில் தொடர்பு கொண்டு வினவுதல் வேண்டும்.

11. **விடைத்தாள் மீளாய்வு** :

மறைப் பாடசாலைத் தலைமை ஆசிரியரின் கோரிக்கைக்கமைய மட்டுமே, விடைத்தாள்களை மீளாய்வு செய்வதற்கு வாய்ப்பளிக்கப்படும். பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் வெளியிடப்படும் மாதிரிப்படிவத்தில், பெறுபேறுகள் வெளியிடப்பட்டு 30 தினங்களுக்குள் மீளாய்வுக்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கலாம். இதற்கான கட்டணம் ஒவ்வொரு தடவையிலும் திருத்தப்பட வாய்ப்பு உள்ளமையினால் குறித்த விண்ணப்பப்படிவத்தில் மேற்படி கட்டணம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள பெறுபேற்றில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால் மட்டும் குறித்த கட்டணம் மீளச் செலுத்தப்படும். எக்காரணத்தை முன்னிட்டும், பரீட்சார்த்திகளுக்கோ அன்றி அவர்களது பிரதிநிதிகளுக்கோ விடைத்தாள்களை சோதித்தறிய வாய்ப்பளிக்கப்படமாட்டாது.

12. **பாடத்திட்டமும் விதப்புரையும்** :

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்படவுள்ள கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குரிய பாடத்திட்டமும் விதப்புரைகளும் "பணிப்பாளர், தேசிய மறைக் கல்வி நடுநிலையம், பெல்கம் இடம், கொட்டா ரோட், கொழும்பு - 08" எனும் முகவரியில் அல்லது 0112685459 எனும் தொலைபேசியூடாக பெற்றுக்கொள்ளலாம். மேற்படி நிபந்தனைகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் ஏற்ப செயற்படுத்துவதற்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்கள் ஆவர் என்பதுடன், இங்கு குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

13. இந்த அமைப்பு விதிகள் பாடத்திட்டமும் மற்றும் விதப்புரையிற் காட்டப்பட்டுள்ள விதிகளுக்கேற்பச் செயற்படுவதற்கு அனைத்து பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டிருப்பதோடு, இவ் அறிவுறுத்தல்களிற் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அவை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் முடிவுகளுக்கேற்பத் தீர்மானிக்கப்படும்.

14. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்கும்.

எம். சத்துரி பின்ந்து,
பணிப்பாளர்,
கிறிஸ்தவ சமய பண்பாட்டு
அலுவல்கள் திணைக்களம்.

கிறிஸ்தவ சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்,
மூன்றாவது மாடி,
இலக்கம் 180, T. B. ஜாயா மாவத்தை,
கொழும்பு - 10,
2023, நவெம்பர் 10.

**கத்தோலிக்கம்**

(2007 ஆம் ஆண்டு முதல் நடைபெறும் பரீட்சைக்கான பாடத்திட்டம்)

இப்பரீட்சை மூன்று மணித்தியாலங்கள் கொண்ட நான்கு வினாப்பத்திரங்களைக் கொண்டது

***வினாப் பத்திரம் 1***

**கத்தோலிக்க விசுவாசம்**

(அ) அப்போஸ்தலர்களின் விசுவாசப் பிரமாணத்தில் உள்ள அடிப்படை படிப்பினைகளை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது.

- இறைவன்
  - உலகின் ஆரம்பம்
  - படைப்பின் அழகு
  - படைப்பை பாதுகாத்தல் (தொடக்க நூல் 1, 2, 3)
- மீட்பர்
  - இயேசு கிறிஸ்து (அருளப்பர் 1 : 1-14)
  - விண்ணரசு படிப்பினைகள் :-(மத்தேயு 5, 6, 7)
  - உவமைகள் (மத்தேயு 13: 1-52)
  - புதுமைகள் (யோவான் : 11:38-45 லூக்கா : 8 : 26-39 மாற்கு : 2 : 1-12, 4 : 35 - 41)
- தூய ஆவியின் செயற்பாடு
  - (யோவான் : 7: 37 - 39, 14 : 15 - 31, 16 : 5-15)
  - (1 கொரிந்தியர் 12 : 4 - 11)
  - கிறிஸ்தவ சபை
    - ஏகம், பரிசுத்தம்,
    - கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம்

    திருச்சபை கிறிஸ்துவின் சரீரம்
    - * (ரோமையர் - 12 : 4-1,
    - * 1 கொரிந்தியர் 12 : 12 - 31
    - திருச்சபையின் நிருவாகம்
    - குருத்துவப் பணி
    - துறவறப் பணி
    - பொது நிலையினர் பணி
  - மீளுருவாக்கப் பணி
    - இறுதி தீர்ப்பு
    - புதிய வானம் புதிய பூமி (திருவெளிப்பாடு 21 : 1-4)

***வினாப்பத்திரம் 2***

**கத்தோலிக்க வாழ்வு**

(ஆ) **கத்தோலிக்க வாழ்வு வாழ பெற்றுக்கொள்ள திருவழிப்பாடு**

* திருப்பலி மற்றும் சடங்குகள்

* பாஸ்கா மறைபொருள்

* தேவ வரப்பிரசாதங்கள்

* அருட்சாதனங்கள் (பொது இயல்பு)

* **புகுமுக அருளடையாளங்கள்**
- திருமுழுக்கு
- உறுதிப்பூசுதல்
- திவ்விய நற்கருணை

* **குணமளிக்கும் அருளடையாளங்கள்**
- ஒப்புரவு
- நோயில் பூசுதல்

* **சமூக பணிக்கான அருளடையாளங்கள்**
- திருமணம்
- குருத்துவம்

***வினாப்பத்திரம் 3***

**கத்தோலிக்க விழுமியங்கள்**

(இ) **பத்து கற்பனைகள் மற்றும் அன்புக் கட்டளைகள்**

இயேசுவின் 2 பிரதான கட்டளைகள்

பத்துக் கட்டளைகளை முழுமைப்படுத்திய யேசு (மத்தேயு 5 : 21-47)
மலைப்பொழிவு [லூக்கா 6 : 17 - 49]

- புத்தியும் சுதந்திரமும்
- நற்குணங்கள்
- மனச் சாட்சி
- இறைவனை அன்பு செய்தல் [கட்டளைகள் 1-3]
- பிறரை அன்பு செய்தல் [4-10]
- பத்துக் கற்பனையில் அடங்கியுள்ள நற்பண்புகள்
- கத்தோலிக்க பண்புகள்

***வினாப்பத்திரம் 4***

**செபவாழ்வு**

(ஈ) **இறையன்பை கட்டி எழுப்பக்கூடிய செபங்கள்**

- பழைய ஏற்பாட்டில் செபம்
  - ஆபிரகாம்
  - மோயீசன்
- புதிய ஏற்பாட்டில் செபம்
  - கிறிஸ்து செபித்த விசேட சந்தர்ப்பங்கள்
  - செபம் பற்றிய விசேட படிப்பினைகள் (லூக்11: 1-3)
- திருச்சபை வாழ்க்கைக்குள் செபம்
  - வாழ்த்துதல்
  - மகிழ்ச்சி
  - புகழ்ச்சி

- நன்றி
- விண்ணப்பம்
- மத்தியஸ்தர்
- தியானம்

- யேசு கற்பித்த செபமும் ஏழு விண்ணப்பங்களும்
  - உமது நாமம் போற்றப் பெறுக
  - உமது அரசு வருக
  - உமது சித்தம் விண்ணுலகில் செய்யப்படுவது போல இம் மண்ணுலகிலும் செய்யப்படுவதாக
  - எங்கள் அன்றாட உணவை எங்களுக்குத் தந்தருளும்
  - எங்களுக்குத் தீமை செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் குற்றங்ளையும் மன்னித்தருளும்
  - சோதனைகளில் எங்களை விழ விடாதேயும்
  - தீமையில் இருந்து காத்தருளும்

- விஷேட பக்தி முயற்சிகள்
  - செபமாலை
  - நவநாள்
  - திருமணித்தியாலம்

  பரிசீலிக்க வேண்டிய புத்தகங்கள்
  - புதிய கத்தோலிக்க வேதநூல்
  - விவிலியம், பெரியகுறிப்பிடம்
  - 2 ஆம் வத்திக்கான் சங்க ஏடு

- திருவழிபாடு
  * இன்றைய உலகின் திருச்சபை
  * கிறிஸ்துவின் சபை
  * பொது நிலையினர் அப்போஸ்தலிக்க சேவை

**அட்டவணை 1**

மாவட்ட பரீட்சை நிலையங்களும் நகரங்களும் அதன் இலக்கங்களும்

| மாவட்ட இலக்கமும் மாவட்டமும் | நகர இலக்கம் | நகரம் |
|---|---|---|
| 01. கொழும்பு | 103 | பொரளை |
| | 109 | மொறட்டுவை |
| | 111 | ஹோமாகம |
| | 112 | அவிஸ்சாவெல்ல |
| | 113 | களுஅக்கலை |
| | 114 | பன்னிப்பிட்டிய |
| 02. கம்பஹா | 201 | கம்பஹா |
| | 205 | நீர்கொழும்பு |
| | 208 | கந்தானை |
| | 209 | இறாகம |
| 03. களுத்துறை | 301 | களுத்துறை |
| 04. கண்டி | 401 | கண்டி |
| 05. மாத்தளை | 501 | மாத்தளை |
| 06. நுவரெலியா | 601 | நுவரெலியா |
| | 609 | தலவாக்கலை |
| 07. காலி | 701 | காலி |
| 08. மாத்தறை | 801 | மாத்தறை |
| 09. அம்பாந்தோட்டை | 901 | அம்பாந்தோட்டை |
| | 904 | தங்கல்ல |
| 10. யாழ்ப்பாணம் | 1001 | யாழ்ப்பாணம் |
| | 1002 | மானிப்பாய் |
| | 1005 | பருத்தித்துறை |
| | 1007 | டெல்ப் |
| 11. மன்னார் | 1101 | மன்னார் |
| | 1102 | முருங்கன் |
| | 1103 | ஆண்டான்குளம் |
| | 1104 | பெரிய பண்டிவிரிச்சான் |
| 12. வவுனியா | 1201 | வவுனியா |
| 13. முல்லைதீவு | 1301 | முல்லைத்தீவு |
| | 1302 | முழங்காவில் |
| 14. கிளிநொச்சி | 1401 | கிளிநொச்சி |
| 15. மட்டக்களப்பு | 1501 | மட்டக்களப்பு |
| 16. அம்பாறை | 1601 | அம்பாறை |
| | 1605 | கல்முனை |
| 17. திருகோணமலை | 1701 | திருகோணமலை |
| 18. குருநாகல் | 1801 | குருநாகல் |
| | 1805 | குளியாப்பிட்டிய |
| | 1807 | நிக்கவரட்டிய |
| 19. புத்தளம் | 1901 | புத்தளம் |
| | 1903 | சிலாபம் |
| | 1904 | வென்னப்புவ |
| 20. அநுராதபுரம் | 2001 | அநுராதபுரம் |
| 21. பொலநறுவை | 2101 | பொலநறுவை |
| | 2103 | ஹிங்குராக்கொடை |
| 22. பதுளை | 2201 | பதுளை |
| 23. மொணராகலை | 2301 | மொணராகலை |
| 24. இரத்தினபுரி | 2401 | இரத்தினபுரி |
| 25. கேகாலை | 2501 | கேகாலை |

## இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

### இந்து அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை, அமைப்பு விதியும் விதப்புரைகளும்

2019, 2020, 2021, 2022 ஆண்டுகளுக்குரிய அறநெறிப் பாடசாலை இறுதிச்சான்றிதழ்ப் பரீட்சைக்காக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நிகழ்நிலை மூலமாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2. பரீட்சை நிலையங்கள் :**
இணைப்பு - 01 இல் காட்டப்பட்டுள்ள அனைத்து மாவட்டங்களிலும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கைக்கேற்ப பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும். எனினும், ஏதேனும் ஒரு நகரத்திற்காக போதியளவு விண்ணப்பதாரிகள் எண்ணிக்கையளவில் விண்ணப்பிக்காத சந்தர்ப்பங்களில் அந்த நகரத்தின் பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு, குறித்த விண்ணப்பதாரிகளை இதற்கு அருகாமையில் அமைந்துள்ள வேறோரு பரீட்சை நிலையத்திற்கு இணைத்துக் கொள்ள நேரிடும்.

**3. மொழிமூலம் :**

இப்பரீட்சை தமிழ் மொழியில் மாத்திரம் நடாத்தப்படும்.

**4. தகைமைகள் :** இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரிகளும் கீழ்க் குறிப்பிடப்படும் தகைமைகளுள் ஏதேனும் ஒன்றையேனும் கொண்டிருத்தல் வேண்டும்.

4.1 அறநெறிப் பாடசாலை 10 ஆம் வகுப்பில் சித்திபெற்று, அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பத்திர வகுப்பில் முழுமையான வருடமோ அல்லது கற்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருத்தல்.

4.2 தேசிய கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தரப்) பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் இந்துசமய பாடம் உள்ளிட்ட ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் அல்லது சிரேஷ்ட பாடசாலைச் சான்றிதழ்ப் பத்திரப் பரீட்சையில் இந்து சமயப் பாடம் உட்பட சித்திபெற்றிருத்தல்.

**குறிப்பு.-** இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள அனைத்து விண்ணப்பதாரிகளும் மேற்குறித்த 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிருப்பவர் என அறநெறிப் பாடசாலையின் தலைமை ஆசிரியர் மூலம் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

**5. விண்ணப்பிக்கும் முறை :**

5.1 இப்பரீட்சைக்காக நிகழ்நிலை (online) மூலம் மட்டுமே விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும்.

5.2 அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சைக்காக, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து அறநெறிப் பாடசாலைகளுக்கும் தேவையான பயனர் பெயர் (User name) மற்றும் கடவுச்சொல் (password) மற்றும் வழிகாட்டற் குறிப்புகள் காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும்.

5.3 எவரேனும் ஒரு விண்ணப்பதாரிக்கு வெளிவாரி விண்ணப்பதாரியாகப் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. எனினும், மேலே 4 ஆம் பிரிவிற் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள ஒரு விண்ணப்பதாரி ஆயின், தாம் வசிக்கும் இடத்திற்கு அருகிலுள்ள ஒரு அறநெறிப் பாடசாலை மூலம் 200.00 ரூபா பரீட்சைக் கட்டணம் செலுத்தி பரீட்சையில் தோற்றுவதற்கு விண்ணப்பிக்க முடியும். இதற்கான அறிவுறுத்தல்கள் அனைத்து அறநெறிப் பாடசாலைத் தலைமை ஆசிரியர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

5.4 குறித்த அறநெறிப் பாடசாலை அதிபரின் மூலமாகவே விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதோடு, அவை நிகழ்நிலை மூலமாக மட்டுமே சமர்ப்பிக்கப்படவும் வேண்டும்.

5.5 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது 2023.11.10 ஆந் திகதி முற்பகல் 9.00 மணி தொடக்கம் 2023.11.20 ஆந் திகதி பிற்பகல் 9.00 மணி வரை மட்டுமே.

5.6 விண்ணப்பப்படிவங்களில், விண்ணப்பதாரிகளின் பெயர்களைக் குறிப்பிடும்போது, பிறப்புச் சான்றிதழிற் பதிவிடப்பட்டுள்ளவாறே பெயர்கள் அமைய வேண்டும் என்பதோடு, பெறுபேறுகள் வழங்கப்பட்ட பின்னர் பெயரில் திருத்தங்கள் செய்வதற்கு விடுக்கப்படும் கோரிக்கைகளின் போது, அச்சுப்பிழை தவிர்ந்த வேறு கோரிக்கைகள் தொடர்பாக கவனஞ் செலுத்தப்படமாட்டாது. விண்ணப்பப்படிவங்கள் தெளிவாகவும், பிழையின்றியும் பூரணப்படுத்தப்படல் வேண்டும். அங்ஙனம் அல்லாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

5.7 அறநெறிப் பாடசாலையின் கணினி இலக்கம் மற்றும் முகவரி என்பன பிழையின்றிக் குறிப்பிடப்பட வேண்டும். அறநெறிப் பாடசாலையின் முகவரியில் மாற்றம் இருப்பின் அதனை அறியத்தருவதோடு, அறநெறிப் பாடசாலையின் தலைமையாசிரியரைத் தொடர்பு கொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கமொன்றையும் குறிப்பிட வேண்டும்.

5.8 விண்ணப்பதாரிகளின் குறித்த உறுதியுரை தொடர்பாகவும், தகைமை கொண்டுள்ளமை தொடர்பாகவும், விண்ணப்பத்தைச் சான்றுப்படுத்தும் தலைமை ஆசிரியர் அல்லது வித்தியாலய அதிபர் மூலம் சான்றுப்படுத்தப்பட அல்லது பொறுப்பேற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

6. **பரீட்சைக் கட்டணம்**:

இந்தப் பரீட்சைக்காக குறிக்கப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணம் ரூபா 200.00 ஆகும். எனினும் முதற் தடவையில் தோற்றும் விண்ணப்பதாரிகள் இப்பரீட்சைக் கட்டணத்திலிருந்தும் விலக்களிக்கப்படுவார்கள். முன்னர் சித்திபெறாத பாடங்களிற் தோற்றி பெறுபேற்றைப் பூரணப்படுத்திக் கொள்ள ஒரு பாடத்திற்காக ரூபா 50.00 கட்டணமாகும்.

6.1 **பரீட்சைக் கட்டணம் செலுத்தல்** :

தலைமை ஆசிரியர் கட்டணம் செலுத்தப்பட வேண்டிய அனைத்து விண்ணப்பதாரிகளினதும் பரீட்சைக் கட்டணத்தை ஒன்று சேர்த்து கீழ்க்குறித்த வழிமுறைகளில் செலுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

(1) எந்தவொரு வங்கிக் கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card) ;

(2) இணையவங்கி சேவையைக் கொண்டுள்ள எந்தவொரு வங்கி ஊடாகவும் பற்று அட்டை மூலம் (Any Bank Debit card with the facility of internet transactions)

6.2 **பரீட்சைக் கட்டணத்தை மீளச் செலுத்தல்** :

எந்தவொரு காரணத்தை முன்னிட்டும் இப்பரீட்சைக் கெனச் செலுத்தப்படும் கட்டணம் வேறு ஒரு பரீட்சைக்கு மாற்றப்படுதல் அல்லது மீள வழங்குதல் மேற்கொள்ளப்படமாட்டாது.

7. **அனுமதி அட்டை**: பரீட்சைக்கு ஏற்றுக்கொள்ளப்படும் அனைத்து விண்ணப்பதாரிகளுக்காகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் மூலம் அனுமதி அட்டை விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த அறநெறிப் பாடசாலைத் தலைமை ஆசிரியரிடம் வழங்கப்படும்.

7.1 பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்ப தாரியும், தமக்குரிய அனுமதி அட்டையில், தமது கையொப்பத்தைச் சான்றுப்படுத்திக் கொண்டு பரீட்சைக்குத் தோற்றும் முதலாவது சந்தர்ப்பத்திலேயே பரீட்சை மண்டப மேற்பார்வை யாளரிடம் ஒப்படைக்க வேண்டும். எவரேனும் விண்ணப்பதாரி ஒருவர், தமது அனுமதி அட்டையை ஒப்படைக்காது இருப்பின் அல்லது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் மூலம் தமக்கென நியமிக்கப்பட்டிருந்த பரீட்சை நிலையம் தவிர்ந்த வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றியிருப்பின் அவ்விண்ணப்பதாரியின் பரீட்சை விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதி அட்டையில் விண்ணப்பதாரியின் கையொப்பம், அறநெறிப் பாடசாலை தலைமை ஆசிரியர் அல்லது வித்தியாலய அதிபர் மூலம் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு 07 தினங்களுக்கு முன்னர் அனுமதி அட்டை கிடைக்காதிருப்பின் உரிய அறநெறிப் பாடசாலைத் தலைவர் மூலம் அது தொடர்பாக, தாமதமின்றி பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு அறிவிக்கப்பட வேண்டும். அத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கீழ்க்குறித்த விபரங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் :

1. பரீட்சையின் பெயர் ;
2. அறநெறிப் பாடசாலையின் பெயர் ;
3. அறநெறிப் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ள கணினி இலக்கம் ;
4. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் மற்றும் முகவரி ;
5. கோரப்பட்டிருந்த பரீட்சை நிலையம்/ நகரம்.

8. **ஆளடையாளம்**:

பரீட்சார்த்தி, பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும், பரீட்சை நிலையத் தலைவர் திருப்திப்படத்தக்கவாறான தமது ஆளடையாளத்தை நிரூபித்துக் கொள்ள வேண்டும். அதற்கென கீழ்க்குறித்த ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

8.1 தேசிய ஆளடையாள அட்டை ;
8.2 செல்லுபடியான கடவுச்சீட்டு ;
8.3 செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே, பரீட்சார்த்தி தமது ஆளடையாளத்தை நிரூபித்துக் கொள்ளத்தக்கவாறு, முகம் மற்றும் இரு காதுகளையும் மூடாதவாறு பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். குறித்தவாறு தமது ஆளடையாளத்தை நிரூபித்துக் கொள்ள மறுப்புத் தெரிவிக்கின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை நிலையத்தினுள் உட்செல்ல அனுமதிக்கப்படமாட்டார். மேலும். பரீட்சை நிலையத்தினுள் உள்நுழைந்த கணத்திலிருந்து பரீட்சை முடிந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் பரீட்சார்த்தியை அடையாளங்கண்டு கொள்ளத் தக்கவாறு முகம் மற்றும் இரு காதுகளை மூடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

9. **சித்தி தொடர்பாகத் தீர்மானித்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல்** :

இந்தப் பரீட்சைக்கான பாடங்களின் தொகை நான்கு என்பதோடு, பரீட்சையில் சித்திபெறுவதற்காக ஒவ்வொரு பரீட்சார்த்தியும் குறித்த நான்கு பாடங்களிலும் சித்திபெற வேண்டும். எனினும், ஒரு தடவையில் மேற்குறித்த நான்கு பாடங்களில் ஒரு பாடம் மட்டும் சித்திபெறாதவிடத்து குறைவான (ஊன) சித்தியாகக் கருதப்படும். பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டிலிருந்து தொடர்ந்துவரும் இரண்டு ஆண்டுகளுக்குள் குறைவான சித்திபெற்ற பாடத்திற்காக பரீட்சைக்குத் தோற்றி,

சித்தியடைந்து பூரணப்படுத்திக் கொள்ள முடியும். குறைவான சித்திபெற்ற மாணவர்கள், தமது சித்தியைப் பூரணப்படுத்திக் கொள்ள பரீட்சைக்குத் தோற்றுவது கட்டாயமாக குறைந்த சித்தியைப் பெற்ற பாடத்திற்காக மட்டுமே ஆகும்.

9.1 ஒவ்வொரு பாடத்திற்குமான வினாத்தாளுக்காக 100 புள்ளிகள் வழங்கப்படுவதோடு சித்திபெறும் பிரிவிற்கமைய புள்ளிகளின் அளவீட்டு வேறுபாடு மற்றும் குறியீடுகள் கீழ்வருமாறு :

| *புள்ளிவீச்சு* | *தரம்* | *குறியீடு* |
|---|---|---|
| 0-34 | சித்தியின்மை | F |
| 35-54 | சாதாரண சித்தி | S |
| 55-69 | தரமான சித்தி | C |
| 70-100 | விசேட சித்தி | D |

9.2 பரீட்சார்த்திகளின் பெறுபேற்றுப் பட்டியல், குறித்த அறநெறிப் பாடசாலைத் தலைவருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

10. **சான்றிதழ்ப் பத்திரம்** :

இப்பரீட்சைக்குத் தோற்றி சித்திபெறுகின்ற ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் பரீட்சைகள் திணைக்களம் மூலம் சான்றிதழ்ப் பத்திரம் ஒன்றை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறித்த சான்றிதழ்ப் பத்திரம், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் மூலம் அறநெறிப் பாடசாலைத் தலைவர்களுக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். மேற்படி பரீட்சையில் தோற்றி சித்திபெற்று, எனினும் சான்றிதழ் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரி எவரேனும் இருப்பின் அது தொடர்பாக அறநெறிப் பாடசாலைத் தலைமை ஆசிரியர், "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவனம்சார் பரீட்சைகள் பெறுபேற்றுக்கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கடிதமூலம் விசாரித்தறிந்து கொள்ள முடியும்.

11. **விடைத்தாள் மீளாய்வு** :

அறநெறிப் பாடசாலைத் தலைமை ஆசிரியரின் கோரிக்கைக்கமைய மட்டும், விடைத்தாள் மீளாய்வு செய்வதற்கு வாய்ப்பளிக்கப்படும். பரீட்சை திணைக்களத்தின் மூலம் வெளியிடப்படும் மாதிரிப்படிவத்தில், பெறுபேறு வெளியிடப்பட்டு 30 தினங்களுக்குள் மீளாய்விற்கான கோரிக்கை சமர்ப்பிக்கப்பட முடியும். இதற்கான கட்டணம் ஒவ்வொரு தடவையிலும் திருத்தப்பட வாய்ப்பு உள்ளமையினால் குறித்த விண்ணப்பப் படிவத்தில் தெரிவிக்கப்படும் முன்னர் வழங்கப்பட்ட பெறுபேற்றில் ஏதேனும் மாற்றம் ஏற்படின் மட்டும் குறித்த கட்டணம் மீளச் செலுத்தப்படும். எக்காரணத்தை முன்னிட்டும், பரீட்சார்த்திகளுக்கோ அன்றி அவர்களது பிரதிநிதிகளுக்கோ விடைத்தாள்களை சோதித்தறிய வாய்ப்பளிக்கப்படமாட்டாது.

12. **பாடங்களுக்கான விதப்புரை** :

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்படவுள்ள அறநெறிப்பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பத்திரப் பரீட்சைக்குரிய பாடங்களுக்கான விதப்புரைகள். இவ்வறிவித்தலின் இணைப்பு - 02 இன் மூலம் காட்டப்பட்டுள்ளன.

13. இந்த அமைப்பு விதிகள் மற்றும் பாடங்களுக்கான விதப்புரையிற் காட்டப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கேற்பச் செயற்படுவதற்கு அனைத்து பரீட்சை விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டிருப்பதோடு, இவ் அறிவுறுத்தல்களிற் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அவை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் முடிவுகளுக்கேற்பத் தீர்மானிக்கப்படும்.

14. **இதை சரியான விதத்தில் மொழிபெயர்ப்பு செய்யவும்.** அமைப்பு விதிகள் மற்றும் பாடங்களுக்கான விதப்புரையிற் காட்டப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கேற்பச் செயற்படுவதற்கு அனைத்து பரீட்சை விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டிருப்பதோடு, இவ் அறிவுறுத்தல்களிற் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அவை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் முடிவுகளுக்கேற்பத் தீர்மானிக்கப்படும்.

பணிப்பாளர்,
இந்து சமய கலாசார அலுவல்கள்
திணைக்களம்.

**இணைப்பு 01**

பரீட்சை நகரங்களும் நகர இலக்கங்களும்

| **கொழும்பு மாவட்டம் - 01** | |
|---|---|
| நகரம் | நகர இல. |
| மருதானை | 0101 |
| கொட்டாஞ்சேனை | 0102 |
| பம்பலப்பிட்டி | 0103 |
| நுகேகொடை | 0104 |
| அவிசாவளை | 0105 |
| ஹோமாகம | 0106 |

| **கம்பஹா மாவட்டம் - 02** | |
|---|---|
| நகரம் | நகர இல. |
| கம்பஹா | 0201 |
| நீர்கொழும்பு | 0202 |
| வத்தளை | 0203 |

| **களுத்துறை மாவட்டம் - 03** | |
|---|---|
| நகரம் | நகர இல. |
| களுத்துறை | 0301 |
| மத்துகம | 0302 |

| | |
|---|---|
| பாணந்துறை | 0303 |
| அழுத்கம | 0304 |

| காலி மாவட்டம் - 04 | |
|---|---|
| நகரம் | நகர இல். |
| காலி | 0401 |

| மாத்தறை மாவட்டம் - 05 | |
|---|---|
| நகரம் | நகர இல. |
| மாத்தறை | 0501 |
| தெனியாய | 0502 |

| அம்பாந்தோட்டை மாவட்டம் - 06 | |
|---|---|
| நகரம் | நகர இல. |
| அம்பாந்தோட்டை | 0601 |

| இரத்தினபுரி மாவட்டம் - 07 | |
|---|---|
| நகரம் | நகர இல. |
| இரத்தினபுரி | 0701 |
| கஹவத்தை | 0702 |
| பலாங்கொடை | 0703 |
| இறக்குவானை | 0704 |

| கேகாலை மாவட்டம் - 08 | |
|---|---|
| நகரம் | நகர இல. |
| கேகாலை | 0801 |
| யட்டியந்தோட்டை | 0802 |
| வரக்காப்பொல | 0803 |

| குருநாகல் மாவட்டம் - 09 | |
|---|---|
| நகரம் | நகர இல. |
| குருநாகல் | 0901 |

| புத்தளம் மாவட்டம் - 10 | |
|---|---|
| நகரம் | நகர இல. |
| புத்தளம் | 1001 |
| சிலாபம் | 1002 |
| உடப்பு | 1003 |

| அநுராதபுரம் மாவட்டம் - 11 | |
|---|---|
| நகரம் | நகர இல. |
| அநுராதபுரம் | 1101 |

| பொலநறுவை மாவட்டம் - 12 | |
|---|---|
| நகரம் | நகர இல. |
| பொலநறுவை | 1201 |
| மனம்பிட்டிய | 1202 |

| மாத்தளை மாவட்டம் - 13 | |
|---|---|
| நகரம் | நகர இல. |
| மாத்தளை | 1301 |
| இரத்தோட்டை | 1302 |

| கண்டி மாவட்டம் - 14 | |
|---|---|
| நகரம் | நகர இல. |
| கண்டி | 1401 |
| புசல்லாவ | 1402 |
| கலஹா | 1403 |
| கம்பளை | 1404 |
| நாவலப்பிட்டி | 1405 |

| நுவரெலியா மாவட்டம் - 15 | |
|---|---|
| நகரம் | நகர இல. |
| நுவரெலியா | 1501 |
| ஹற்றன் | 1502 |
| பூண்டுலோயா | 1503 |
| தலவாக்கலை | 1504 |
| மஸ்கெலியா | 1505 |

| பதுளை மாவட்டம் - 16 | |
|---|---|
| நகரம் | நகர இல. |
| பதுளை | 1601 |
| வெலிமடை | 1602 |
| பண்டாரவளை | 1603 |
| ஹப்புத்தளை | 1604 |
| பசறை | 1605 |

| மொனராகலை மாவட்டம் - 17 | |
|---|---|
| நகரம் | நகர இல. |
| மொனராகலை | 1701 |

| அம்பாறை மாவட்டம் - 18 | |
|---|---|
| நகரம் | நகர இல. |
| அம்பாறை | 1801 |

| அம்பாறை மாவட்டம் - 18 | |
|---|---|
| நகரம் | நகர இல. |
| அக்கரைப்பற்று | 1802 |
| கல்முனை | 1803 |
| திருக்கோவில் | 1804 |
| பொத்துவில் | 1805 |
| சம்மாந்துறை | 1806 |

| மட்டக்களப்பு மாவட்டம் - 19 | |
|---|---|
| நகரம் | நகர இல. |
| மட்டக்களப்பு | 1901 |
| களுவாஞ்சிக்குடி | 1902 |
| வாழைச்சேனை | 1903 |
| செங்கலடி | 1904 |

| திருகோணமலை மாவட்டம் - 20 | |
|---|---|
| நகரம் | நகர இல. |
| திருகோணமலை | 2001 |
| மூதூர் | 2002 |

| வவுனியா மாவட்டம் - 21 | |
|---|---|
| நகரம் | நகர இல. |
| வவுனியா | 2101 |
| ஓமந்தை | 2102 |
| செட்டிக்குளம் | 2103 |

| மன்னார் மாவட்டம் - 22 | |
|---|---|
| நகரம் | நகர இல. |
| மன்னார் | 2201 |

| முல்லைத்தீவு மாவட்டம் - 23 | |
|---|---|
| நகரம் | நகர இல. |
| முல்லைத்தீவு | 2301 |
| புதுக்குடியிருப்பு | 2302 |
| ஒட்டுசுட்டான் | 2303 |

| கிளிநொச்சி மாவட்டம் - 24 | |
|---|---|
| நகரம் | நகர இல. |
| கிளிநொச்சி | 2401 |
| ஸ்கந்தபுரம் | 2402 |
| பூநகரி | 2403 |

| கிளிநொச்சி மாவட்டம் - 24 | |
|---|---|
| நகரம் | நகர இல. |
| முழங்காவில் | 2404 |
| பளை | 2405 |

| யாழ்ப்பாணம் மாவட்டம் - 25 | |
|---|---|
| நகரம் | நகர இல. |
| யாழ்ப்பாணம் | 2501 |
| சாவகச்சேரி | 2502 |
| பருத்தித்துறை | 2503 |
| வேலணை | 2504 |
| நெடுந்தீவு | 2505 |

## இணைப்பு 2

## அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை இந்து சமய பாடத்திட்டம்

01. சமய வரலாறு
02. சமய மெய்யியல்
03. சமய இலக்கியம்
04. சமய வாழ்வியல்

**01. சமய வரலாறு**

1.0 *இந்து சமயத்தின் பொதுவான வரலாற்று நோக்கு*

1.1 சிந்துவெளி நாகரீகம்
1.2 சனாதன தர்மம்
1.3 வேதகாலம்
1.3.1 வேதகால தெய்வங்களும், வழிபாட்டு முறைகளும்
1.4 இதிகாசங்கள்
1.4.1 வகை
1.4.2 தோன்றக் காரணம்
1.4.3 பகவத் கீதை
1.5 புராணங்கள்
1.5.1 பதினென் புராணவகை தோன்றக் காரணம்
1.6 தரும சாத்திரங்கள்

2.0 *சைவ சமய வரலாறு*

2.1 சைவ சமயத்தின் தொன்மை
2.2 சிந்துவெளி நாகரிக காலச் சிவவழிபாடு
2.3 சிவாகமங்களின் தோற்றமும் வழிபாடும்

3.0 *தமிழகத்துச் சைவசமய வரலாறு*

3.1 சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும்

3.2 பக்திநெறி

3.2.1 காரைக்காலம்மையார்
3.2.2 சமயகுரவர் நால்வர்
3.2.3 ஆலயங்களும் வழிபாடும்

3.3 சாத்திரங்களும் கோத்திரங்களும்

3.3.1 கோயில் கட்டிடங்களின் வளர்ச்சி
3.3.2 திருமுறை, திவ்வியபிரபந்தம் தொகுப்பு
3.3.3 சந்தான குரவர் நால்வர்
3.3.4 மெய்கண்ட சாத்திரங்கள்
3.3.5 பிற்காலத்து தோத்திரப் பாடல்கள்

3.4 சைவ நிறுவனங்கள் : மடங்களும் ஆதீனங்களும்
3.5 ஞானியர் வரலாறு : திருமூலர்

4.0 *இலங்கையில் சைவம்*

4.1 தொன்மை
4.2 புராதன ஆலயங்கள் (சிறப்பாக)
திருக்கேதீச்சரம்
திருக்கோணேஸ்வரம்
முன்னேச்சரம்
நகுலேஸ்வரம்
கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்
4.3 பிரதேச ஆலய வரலாறு
(மாணவர் தாம் வாழும் பிரதேசத்தில் உள்ள ஆலயம் பற்றி அறிதல்)

5.0 *இலங்கையில் சைவ மறுமலர்ச்சி*

5.1 பெரியார்கள்
5.1.1 ஆறுமுகநாவலர்
5.1.2 விபுலானந்தர்
5.2 சைவம் வளர்த்த நிறுவனங்கள்
5.3 ஞானியர்

02. **சமய மெய்யியல்**

1.0 *வேதங்கள்*

1.1 பல தெய்வக் கோட்பாடு
1.2 ஒரு தெய்வக் கோட்பாடு
1.3 வேதப் பிரிவுகள்

2.0 *உபநிடதங்கள்*

2.1 மகாவாக்கியங்கள்
2.2 அறக்கோட்பாடு

3.0 *பகவத்கீதை*

3.1 நால்வகை யோகம்

4.0 *மூவகை வேதாந்தங்கள்*

4.1 அத்துவைதம்
4.2 விசிட்டாத்வைதம்
4.3 துவைதம்
(இவற்றை அறிமுகப்படுத்தினால் போதும்)

5.0 *சைவ சித்தாந்தம்*

5.1 மெய்கண்ட சாத்திரங்கள் (14) அறிமுகம்
5.2 சற்கரிய வாதம்
5.3 முப்பொருள் (பதி, பசு, பாசம்)
5.4 சைவநாற்பாதங்கள் (சரியை, கிரியை, யோகம், ஞானம்)
5.5 குரு, லிங்க, சங்கம வழிபாடு
5.6 சிவசின்னங்கள்
5.7 தீட்சை

6.0 திருவருட்பயன் - 10 அதிகாரம்

03. **சமய இலக்கியம்**

1.0 *திருமுறைப் பாடல்கள்*
(மனனம், பொழிப்பு, சந்தர்ப்பம்)

1.1 திருஞானசம்பந்தர் தேவாரம்
(அ) "வேயுறு தோளி பங்கன்..............."
(பதிகம் முழுவதும்)

1.2 அப்பர் தேவாரம்
(அ) "மாதர் பிறை கண்ணியானை ......"

1.3 சுந்தரர் தேவாரம்
(அ) திருக்கேதீச்சரத் திருப்பதிகம்
"நத்தார் படை ..........................."

1.4 மாணிக்கவாசகர் - திருவாசகம்
(அ) திருவெம்பாவை (முழுவதும்)
(ஆ) சிவபுராணம்

1.5 திருவிசைப்பா
(அ) "அற்புதத் தெய்வம் ...................."
(ஆ) "கற்றவர் விழுங்கும் ...................."

1.6 திருப்பல்லாண்டு
(அ) "சீரும் திருவும் பொலிய ................"
(ஆ) "ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் ............."
(இ) "மிண்டு மனத்தவர் ................."

1.7 திருப்புராணம்
(அ) "ஐந்து பேரறிவும் ...................."
(ஆ) "தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உந்தன் ........................"
(இ) "அண்ணலார் தமக்கீடு ................."

1.8 திருமந்திரம்
(அ) "அன்பும் சிவமும் ................."
(ஆ) "உள்ளம் பெருங்கோயில் ................"

(இ) "யாவர்க்குமாம் ..................."

1.9 இரண்டாம் திருமுறை

முத்தநாயனார் திருவிரட்டை மணி மாலை– கபிலதேவ நாயனார்

"திருவாக்கும் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொற் ..........."

காரைக்காலம்மையார் அருளிச் செய்த அற்புதத் திருவந்தாதி

"கண்ணாரைக் கண்டும் என் கையாரக் கூப்பியும் ................"

2.0 *ஏனைய தோத்திரப் பாடல்கள்*

2.1 திருப்புகழ் - அருணகிரிநாதர்

(அ) "எதிரிலாத பக்தி ..................."

(ஆ) "பக்தியால் யானுனை ............"

2.2 அபிராமி அந்தாதி – அபிராமிப்பட்டர்

(அ) "நின்றும் இருந்தும் கிடந்தும் ................................................"

(ஆ) "சித்தியும் சித்தி தரும் தெய்வமுமாகி ....................."

(இ) "கண் களிக்கும்படி கண்டு கொண்டேன் ........................"

2.3 பராபரக்கண்ணி – தாயுமானவர்

(அ) "கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க ....................."

(ஆ) "மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கு.........."

(இ) "விரும்பு சரியை முதல் மெய்ஞானம் நான்கும் ........."

(ஈ) "சினம் இறக்கக் கற்றாலும் சித்தி எல்லாம் பெற்றாலும் ................................................"

(உ) "எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே ....................."

3.0 திவ்விய பிரபந்தங்கள்

திருப்பாவை - ஆண்டாள்

(அ) "மாரிமழை முழைஞ்சல் முன்னிக் கிடத்துறங்கும்............."

(ஆ) "அன்றிவ்வுலக மறந்தாயடி போற்றி ..........................................................."

(இ) "மாலே மணிவண்ணா மார்கழி நீராடுவான் ....................................."

4.0 *கந்தபுராணம்*

கந்தவிரதப் பாடல்கள் - 20 (தெரிவுசெய்யப்பட்டவை) – பாடல் ஒன்று முதல் இருபது வரை

5.0 *பெரிய புராணம்*

கண்ணப்பநாயனார் புராணம் - பாடல் 815 முதல் 835 வரை

6.0 *திருவிளையாடற் புராணம்* - பரம்சோதி முனிவர்

(அ) கால்மாறியாடின படலம் - 1475 பாடல் முதல் 1489 பாடல் வரை

7.0 *நீதிப்பாடல்கள்*

திருக்குறள் - திருவள்ளுவர்

(அ) அறன்வலியுறுத்தல் - 4 ஆம் அதிகாரம்

(ஆ) இல்வாழ்க்கை – 5 ஆம் அதிகாரம்

(இ) அடக்கமுடைமை – 13 ஆம் அதிகாரம்

(ஈ) ஒழுக்கமுடைமை – 14 ஆம் அதிகாரம்

(உ) நட்பு - 79 ஆம் அதிகாரம்

**04. சமய வாழ்வியல்**

1.0 *ஆலய வழிபாடும் இறை நம்பிக்கையும்*

1.1 திருக்கோயில் அமைப்பு

1.2 திருக்கோயில் வழிபாடு

1.3 நித்திய, நைமித்திய கிரியைகள்

1.4 இறை நம்பிக்கை (பக்தி அனுபவங்கள்)

2.0 *வீட்டில் வழிபாடு*

2.1 நித்திய வழிபாடு (காலை, மாலை வழிபாடு)

2.2 விசேட வழிபாடு

(அ) கூட்டு வழிபாடு

(ஆ) தியானம்

(இ) செபம்

2.3 அகப்புறத் தூய்மை

3.0 *விரதங்களும் பண்டிகைகளும்*

3.1 விரதங்கள்

(அ) சிவராத்திரி
நவராத்திரி
விநாயகர் சதுர்த்தி
கந்தசஷ்டி
விநாயகர் சஷ்டி
திருவாதிரை
பிரதோஷம்
வைகுண்ட ஏகாதசி

(ஆ) அமாவாசை, பூரணை விரதங்கள்

*3.2* பண்டிகைகள்

*3.2.1* தைப்பொங்கல்
*3.2.2* சித்திரை வருடப் பிறப்பு
*3.2.3* ஆடிப்பிறப்பு
*3.2.4* தீபாவளி
*3.2.5* கார்த்திகை விளக்கீடு

*4.0 அபரக் கிரியைகள்*

*4.1* பொது விளக்கீடு
*4.2* மரணக் கிரியைகள்
*4.3* சபிண்டீகரணம்
*4.4* சிரார்த்தம்

*5.0 சமய, ஆன்மீக விழுமியங்கள்*

*5.1* பெற்றோர், மூத்தோர், பெரியோர், குரு ஆகியோரைக் கனம் பண்ணல்
*5.2* நற்குடி மக்களாக வாழ்வதற்கு உதவும் நெறிமுறைப் பண்புகளை வாழ்வில் கடைப்பிடித்தல்
*5.3* அன்பு, உண்மை, கருணை, இன்னா செய்யாமை, பிறர் நலம் பேணல், கூடிவாழும் பண்பு, நீதி, கடமையுணர்வு முதலிய மனித விழுமியங்களைப் பேணல், இவற்றை அறிந்து கொள்ளல்.

*6.0 சமய வாழ்வுடன் கலைகள்-*

இசை
நடனம்
கட்டடம்
சாத்துப்படி
மாலை கட்டுதல்
பண்ணிசை
சிற்பம்
ஓவியம்
சுவாமிக்கு அலங்காரம் செய்தல்
கோலம் போடுதல்

*11-315/ 1*

---

**பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**
**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்- அத்துருகிரிய**
**2023/ 2024 கல்வியாண்டுக்கு மாணவர்களை உட்சேர்த்தல்**

தரமான பயிற்சிகள் மூலம் நிபுணத்துவத்தை அடையும் பொருட்டு பெருந்தோட்ட கைத்தொழிலில் சேவை புரியும் அனைவரினதும் தொழிற்சார் திறனை அபிவிருத்திச் செய்யும் வகையில் 1979 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட பயிற்சி நிறுவனம் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனமாகும்.

**பெருந்தோட்ட பயிர் தொழிதல்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா (NDPCT) NVQ 05 மட்டம்**

| | |
|---|---|
| காலவரையறை- | ஒரு வருடம் (1) முழு நேர கல்வி நடவடிக்கை 06 மாத களம் சார்ந்த கல்வி |
| மொழி- | ஆங்கிலம் / சிங்களம் |
| பாடநெறிக் கட்டணம்- | ரூபா 130,000.00 |

**உள்நுழைவிற்கான தகுதிகள்:**

க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஏதேனும் பாட பிரிவில் சித்தியடைந்த அல்லது கமத்தொழில் அல்லது பெருந்தோட்ட துறைக்குரிய NVQ 04 மட்டத்தில் பாடநெறியினை நிறைவு செய்துள்ள மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

மேற்கூறிய பாடநெறிகளுக்கு 2023.11.25 ஆந் திகதி வரை விண்ணப்பம் கோரப்படும். விண்ணப்படிவம் www.nipm.gov.lk வலைத்தளம் மூலம் அல்லது கீழ்வரும் மாதிரிக்கமைய தயாரித்து "பணிப்பாளர்/ நிறைவேற்று அதிகாரி, தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம், எம்.டீ.எச்.ஜயவர்தன மாவத்தை, அத்துருகிரிய" என்ற முகவரிக்கு அனுப்ப முடியும்.

மேலதிக தகவல்களுக்கு :

*011- 2770232/0710645302.*

*11- 317*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.